# வணிகவியல் படிப்பு நீட்டிப்பு...!!! NTU-வின் அடுத்தடுத்த திட்டம் என்ன..???




சிங்கப்பூர்:சிங்கப்பூரின் நான்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் (NTU), தனது வணிகவியல் இளங்கலை (ஹானர்ஸ்) திட்டத்தை புதுப்பித்துள்ளது. 2026 கல்வியாண்டிலிருந்து, மூன்று ஆண்டுகள் கொண்டிருந்த படிப்பு நான்கு ஆண்டுகளாக நீட்டிக்கப்படும். தொழில்நுட்பம் மற்றும் துறைகளுக்கு இடையேயான கற்றலுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படும்.

2025-ல் சேர்ந்த புதிய மாணவர்களும், தேசிய சேவைக்குப் பிறகு 2026 அல்லது 2027-ல் சேரவிருக்கும் மாணவர்களும் நான்கு ஆண்டு திட்டத்திற்கு மாறுவதற்கான வாய்ப்பைப் பெறுவார்கள் என்று NTU தெரிவித்துள்ளது.

புதிய பாடத்திட்டத்தின் முதல் இரண்டு ஆண்டுகளில், மாணவர்கள் தொழில்நுட்பம் மற்றும் பயன்பாட்டு கணிதம் தொடர்பான பாடங்களை கற்க வேண்டும். மேலும், பகுப்பாய்வு, நிரலாக்கம்,

செயற்கை நுண்ணறிவு, பிளாக்செயின் மற்றும் டிஜிட்டல் வணிக உத்திகள் ஆகியவற்றையும் கற்றுக்கொள்வார்கள்.
இந்த மாற்றத்திற்கான பல்கலைக்கழகத்தின் நோக்கம், மாணவர்கள் எதிர்கால பணியிடத்தில் போட்டியிட தேவையான தொழில்நுட்ப அறிவைப் பெறுவதை உறுதி செய்வதாகும்.

https://www.sgtamilan.com/extension-of-commerce-course/#goog_rewarded